அதேபோல, மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கோபி வெங்கிடு அவர்களைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். 1996 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக நான் பணியாற்றிய காலம் நினைவிலே இன்னும் பசுமையாக இருக்கிறது. அதேநேரத்தில் நாங்களெல்லாம் ஈரோடு மாவட்டத்தில் கழகப் பணியாற்றுகின்றபோது, எங்களுக்கெல்லாம் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, எங்களையெல்லாம் வழி நடத்தியவர் அவர். அவரும் மரியாதைக்குரியவர். அவருக்கு நினைவரங்கம் அமைப்பது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்துபேசி, உரிய நேரத்தில் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

கால்நடை மருத்துவமனை

***9738—திரு. ஆ. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம், சோராஞ்சேரி ஊராட்சி, அணைக்கட்டுச்சேரி கிராமத்திலுள்ள ஜெ.ஜெ. நகர் பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம், சோராஞ்சேரி ஊராட்சி, அணைக்கட்டுச்சேரி கிராமத்திலுள்ள ஜெ.ஜெ. நகர் பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இன்று சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொன்னாலும், தொடர்ந்து

2024 பிப்ரவரி 22]

உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு, சாத்தியக்கூறுகள் இல்லை, இல்லை, இல்லை என்று சொல்கின்ற பதிலைச் சொல்ல வேண்டிய காரணத்தினால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி 245 நடமாடும் கால்நடை மருத்துவமனை வாகனங்கள் ஏறக்குறைய 15 நாட்களில் வர இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் எந்தெந்தப் பகுதிகளில் கால்நடை மருத்துவமனைகள் இல்லையோ, எங்கெங்கு கால்நடைகள் இருக்கின்றனவோ, அத்தனை இடங்களுக்கும் நடமாடும் கால்நடை மருத்துவமனைகள்மூலம் (ambulance van) (மேசையைத் தட்டும் ஒலி) கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். ஏறக்குறைய 15 நாட்களில் இது நடக்கும் எனத் தெரிவித்து, இது உண்டு, உண்டு என்ற பதிலை இன்றைக்குச் சொல்லியிருக்கின்றோம்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வருடம் எனது தொகுதியில் வெள்ளியூரில், கால்நடை மருத்தகத்திற்குக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்று கேள்வி கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்றுதான் பதிலளித்திருந்தார். ஆனால், ஓர் ஆண்டு முடிவதற்குள் அதற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கித் தந்து, அந்தக் கட்டடப் பணிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இல்லை என்று சொன்னாலும், பிறகு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு செய்து கொடுத்திருக்கிறார்; அதற்காக நன்றி.

அதுபோலவே, எல்லாபுரம் ஒன்றியம், செம்பேடு கிராமத்தில் சுமார் 5,000 கால்நடைகள் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் கால்நடை மருந்தகத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பெரியபாளையம் கிராமத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, செம்பேடு கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஆயிலச்சேரி, செங்கிலிக்குப்பம், புதுகுப்பம் போன்ற பகுதிகளிலுள்ள மக்கள் மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பால் விற்பனை ஆகியவற்றைத்தான் தொழிலாக வைத்திருக்கிறார்கள். அந்த ஊர்களிலும் சுமார் 5,000 மாடுகளும், கால்நடைகளும் இருக்கின்றன. அவர்கள் கொசஸ்தலை ஆற்றைக் கடந்து மாகரல் கிராமத்திலுள்ள கால்நடை கிளை மருந்தகத்திற்குச் செல்ல வேண்டி இருக்கிறது. எனவே, அங்கும் ஒரு கால்நடைக் கிளை மருந்தகம் ஏற்படுத்தித் தர முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர், மரியாதைக்குரிய அண்ணன் தளபதி அவர்கள், தமிழகத்தினுடைய பொருளாதாரம் உயர வேண்டுமென்று எண்ணி, எவ்வாறு பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கின்றார்களோ, அதுபோல, விவசாயப் பெருமக்கள், கிராமப் பொருளாதாரம் வளர்வதற்கு கால்நடைதான் உறுதுணையாக இருக்கும் என்ற வகையிலே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அந்த வகையிலே, உறுப்பினர்கள் 250 பேர் கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கைகள் வைத்து வருகிறார்கள். அதுபோல நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சியினுடைய பெருந்தலைவர்கள் அத்தனை பேரும் கால்நடை கிளை நிலையம் வேண்டும், வேண்டும் என்று கேட்கிறார்கள். கடந்த காலங்களில் என்ன நடந்து இருக்கிறது என்று கணக்கெடுத்துப் பார்த்தோம் என்று சொன்னால், கணக்கின்படி கால்நடைக் கிளை நிலையங்கள், மருத்துவமனைகள் அதிகமாக இருக்கின்றன. ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் அவசரமாகக் கேட்கும்போது, “எங்கள் ஊருக்கு நாங்கள் கொண்டு செல்கிறோம்” என்று order போட்டு, order போட்டு அருகருகில் கால்நடை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்தெந்த வகைகளிலே கால்நடைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அந்தந்த நடவடிக்கைகளை

2024 பிப்ரவரி 22]

மேற்கொள்ள வேண்டுமென உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள். அந்த உத்தரவின்பேரில் தமிழகத்தில் 245 நடமாடும் கால்நடை அலகுகள் வரவிருக்கின்றன. அடுத்து நடைபெறவிருக்கும் சட்டமன்றக் கூட்டத்தொடரிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரயிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒட்டுமொத்தமாக சொல்கிறேன். எங்கெங்கு தேவையோ, அங்கெல்லாம் நோய் இல்லாத கால்நடைகளை உருவாக்கக்கூடிய வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போதுகூட 695 புதுக் கால்நடை மருத்துவர்கள் TNPSC *மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆட்சி பதவியேற்கின்றபோது கால்நடை மருத்துவர்களே இல்லை என்ற நிலை இருந்தது; கால்நடை உதவியாளரே இல்லை என்ற நிலை இருந்தது. அன்றைக்கு 1,141 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது 695 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, கிராமங்களின் பொருளாதாரம் வளர்வதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஆணைகளை வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்கின்ற அந்தப் பணிகளையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று செய்து தருவோம் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள், நன்றி சொல்லிவிட்டு அமருங்கள்.*

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் திருவள்ளூர் மாவட்டத்தை ஒட்டியிருக்கிற ஆந்திர மாநிலத்திலுள்ள, நெல்லூர் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் பரவியிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த, தமிழ்நாட்டிற்குள் பறவைக் காய்ச்சல் பரவாமல் இருக்க எந்த மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2024 பிப்ரவரி 22

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் பரவி வருகிறது என்பதைக் கேள்விப்பட்டவுடன் துறை அதிகாரிகளுக்கு உடனடியாக உத்தரவுகள் வழங்கி, அங்கிருந்து எந்த வாகனம் வந்தாலும், வாகனங்களில் பறவைகள் வந்தாலும், கோழிகள் வந்தாலும், எதுவும் உள்ளே வரக்கூடாது என்ற வகையிலே அனைத்து வாகனங்களுக்கும் கிருமிநாசினி மருந்து தெளித்து, நோய் பரவக்கூடாது என்கிற வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பகுதியிலும் அவ்வாறுதான் செய்திருக்கிறோம். அந்த வகையிலே, பணிகளைச் செய்வதற்கான உத்தரவுகளை வழங்கி, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களால், பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (குறுக்கீடு)

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வண்டி வரக்கூடாது என்பதற்காக அல்ல, வண்டியில் நோய் வந்துவிடக் கூடாது என்பதற்காக மருந்து தெளித்து அனுப்புகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

46—

விசைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள்

***83459—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, ஆங்குணம் கிராமத்தில் விசைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,